MAY 2025 **P/ID 35321/PTL3L**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. நித்திலக்கோவை என்றால் என்ன?

2. விளக்குக:- ஊடல்.

3. பொய்யாமொழிப் பேசுதல் என்றால் என்ன?

4. பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதியைப் பாடிய புறநானூற்றுப் புலவர் யார்?

5. கோப்பெருஞ்சேரல் இளம்பொறைக்கு அறிவுரையால் அறிவுறுத்திய புலவரின் பெயரை எழுதுக.

6. நிலம் பெயர்வதாயினும் நினது ஆணையாகிய சொல் தவறாது நிலைக்க வேண்டும் – யார் யாரைப் பாடியது?

7. உள்ளுறை என்றால் என்ன? சான்று தருக.

8. நீர் வளம் இல்லையேல் உலகத்தின் வளம் இல்லாததுபோல், அவரின்றி நாமில்லை – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

9. பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே - எது? ஏன்?

10. தலைவனின் பரத்தமைக்கு அடையாளமாகக் காணப்படுவது எது?

11. கலித்தொகைப் பாடல் வழி கோடிட்ட இடத்தை நிரப்புக : உமது செலவை _____ நீக்கும்.

12. மழையின்மையால் காட்டுப்பசுக்கள் உணவாக எதனை உண்ணும்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

13. பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லிய அகநானூற்று மாமூலனாரின் பாலைத் திணைப் பாடலின் கருத்துக்களை விளக்குக.

14. கரிகாலனின் போர்த்திறத்தினைப் புறநானூற்றுப் பாடல் வழி எடுத்துரைக்க.

15. இளஞ்சேட் சென்னியின் பெருமைகளாக ஊன்பொதி பசுங்குடையார் கூறுவனவற்றை எழுதுக.

16. தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி அலரச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாத்திய அம்மூவனாரின் நற்றிணைப் பாடலின் பொருளை விளக்குக.

17. “கொங்குதேர் வாழ்க்கை...” எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதி விளக்குக.

18. தலைவனைப் பொருள்வழிப் பிரியாமல் தடுக்க தோழி மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.

19. செவிலிக்கு அந்தணர் உரைத்த இல்வாழ்க்கை இயல்புகளை எடுத்தியம்புக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குக் கிழத்தி கூறிய பரணரின் அகநானூற்றுப் பாடலின் பொருள்நயங்களை விளக்கி உரைக்க.

21. முரஞ்சியூர் முடிநாகரயர் பாடிய சேரலாதனின் சிறப்புகளாகப் புறநானூறு மொழிவனவற்றை விவரிக்க.

22. நற்றிணையின் பாலைத் திணைப்பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

23. குறுந்தொகையின் நெற்தல் திணைப்பாடல்களின் செய்திகளை விளக்குக.

24. “தொடங்கற்கண் தோன்றிய முதியவன்... எனத் தொடங்கம் கலித்தொகைப் பாடலின் செய்திகளை விளக்கி உரைக்க.

———————